

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்.கே.என்.நேரு 29.08.2025 அன்று திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள வெஸ்ட்ரி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் பதிவேற்றம் செய்வதையும் முகாமின் செயல்பாடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், திருச்சிராப்பள்ளி வட்டாட்சியர் (மேற்கு) பிரகாஷ், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்ட விளையாட்டரங்கத்தில், மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா தலைமையில் துவக்கி வைத்தார்கள். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் து.செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## முதல்வர் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்ற பின் 12,152 திருக்கோயில்களில் ரூ.6,980 கோடி மதிப்பில் 27,563 திருப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி!

# ரூ.3,843 கோடியில் 14,594 பணிகள் நிறைவு பெற்றுள்ளன!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல் – பெருமிதம்!

**சென்னை, ஆக.31-**

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், 12,152 திருக்கோயில்களில் ரூ.6,980 கோடி மதிப்பீட்டிலான 27,563 திருப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அதில் ரூ.3,843 கோடி மதிப்பீட்டிலான 14,594 பணிகள் நிறைவு பெற்றுள்ளன என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்துள்ளார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (29.08.2025) சென்னை, ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தார்.

அமைச்சர் கூறியதாவது:-

மாண்பமை உச்சநீதிமன்றத்தில் இன்று கொளத்தூர், அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டிட கொளத்தூர் அருள்மிகு சோமநாத சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தினை 25 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டது தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தது. அந்த வழக்கு விசாரணையின்போது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதோடு, கல்வி என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை தேவை என்று உலகிற்கு உணர்த்திய உச்சநீதிமன்றத்திற்கு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**சீர்வரிசையுடன் 737 திருமணங்கள்!**

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் இதுவரை 3,503 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இது இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றில் சாதனையாகும். வரும் தை மாதத்திற்குள் 4,000 திருக்கோயில்களை நிறைவு செய்யும். திருக்கோயில்கள் சார்பில் கடந்தாண்டு வரை 1,800 கட்டணமில்லா திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தாண்டு அறிவிக்கப்பட்ட 1,000 திருமணங்களில் 737 திருமணங்கள் நடத்தப்பட்டு மொத்தம் 2,537 இணைகளுக்கு 4 கிராம் பொன் தாலி உள்பட சீர்வரிசை களுடன் திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த அரசின் மிகப்பெரிய சாதனை ஆக்கிரமிக்கப்பட்ட திருக்கோயில் நிலங்கள் மீட்கப்பட்டதாகும். இதுவரை 1,026 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,846.62 கோடி மதிப்பிலான 7,923.86 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஒருகால பூசைத் திட்டத்தில் பயன் பெற்று வந்த 12,959 திருக்கோயில்களுக்கான வைப்பு நிதி ரூ.1 லட்சத்திலிருந்து ரூ.2 லட்சமாகவும், பின்னர், ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டது. இதன்மூலம் தற்போது 19,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக அரசு ரூ.335 கோடியை மானியமாக வழங்கியுள்ளது. ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இந்தாண்டு முதல் ஊக்கத்தொகை ரூ.1,500/ ஆக உயர்த்தப்பட உள்ளது. இத்திட்ட அர்ச்சகர்களின் மகன், மகள்களின் உயர்கல்வி பயில ஊக்கத்தொகையாக ரூ.10,000/ வழங்கப்பட்டு இதுவரை 1,500 மாணவ, மாணவியர் பயன்பெற்றுள்ளனர்.

**68 கோயில்களுக்கு குடமுழுக்கு!**

திருக்கோயில்களில் திருப்பணிகள் ஆன்மிகப் புரட்சியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பின், 12,152 திருக்கோயில்களில் ரூ.6,980 கோடி மதிப்பீட்டிலான 27,563 திருப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அதில் ரூ.3,843 கோடி மதிப்பீட்டிலான 14,594 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. உபயதாரர்கள் மட்டும் ரூ.1,470.21 கோடி மதிப்பிலான 11,556 திருப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களாக 714 திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு அரசு நிதி, திருக்கோயில் நிதி, பொதுநல நிதி மற்றும் உபயதாரர் நிதி ரூ.571.55 கோடி மதிப்பீட்டில் 352 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 68 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளன. இத்திருப்பணிக்காக மட்டும் அரசு ரூ.425 கோடியினை வழங்கியுள்ளது. தஞ்சாவூர் மாவட்டம், துக்காச்சி, அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்கு யுனெஸ்கோ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.1 லட்சத்திலிருந்து ரூ.2 லட்சமாகவும், பின்னர் ரூ.2.50 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ரூ.212.50 கோடியில் 5,000 கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் 5,000 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் திருக்கோயில்கள் பயன்பெற்றுள்ளன. திருக்கோயில்களில் முகப்பாக இராஜகோபுரங்கள் திகழ்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றபின், ரூ.216.74 கோடி மதிப்பீட்டில் 107 திருக்கோயில்களில் 109 புதிய இராஜகோபுரங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ரூ.93.84 கோடி மதிப்பீட்டில் 329 திருக்கோயில்களில் 351 இராஜகோபுரங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஓடாமல் இருந்த திருவாரூர் ஆழித்தேரை ஓட்டி காட்டியதைபோல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சாதி, மத வேறுபாட்டால் 18 ஆண்டுகள் ஓடாமல் இருந்த சிவகங்கை மாவட்டம், கண்டதேவி தேரோட்டத்தை நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஓட்டிக் காட்டினார்.

கடந்த நான்காண்டுகளில் ரூ.75.55 கோடி மதிப்பீட்டில் 130 திருக்கோயில்களுக்கு 134 புதிய மரத்தேர்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதில் 28 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. ரூ.19.20 கோடி மதிப்பீட்டில் 72 திருக்கோயில்களில் 75 மரத்தேர்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 40 மரத்தேர் மராமத்து பணிகள் நிறைவு பெற்றுள்ளன. திருத்தேர்களை பாதுகாக்கும் வகையில் ரூ.30.31 கோடி மதிப்பீட்டில் 197 திருத்தேர் கொட்டகைகள் அமைக்கப்பட்டு அதில் 104 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

**147 புதிய அன்னதானக் கூடங்கள்!**

ரூ.31 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தங்கத்தேர்களும், ரூ.29.77 கோடி மதிப்பீட்டில் 9 புதிய வெள்ளித்தேர்களும் செய்திட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பெரிய பாளையம் தங்கத்தேரும், திருத்தணி மற்றும் சென்னை காளிகாம்பாள் திருக்கோயில்களின் வெள்ளித்தேர்களும் பக்தர்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. ரூ.4 கோடி செலவில் 3 புதிய திருக்குளங்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு, ரூ.137.42 கோடி மதிப்பீட்டில் 249 திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டு வருகிறது. ரூ.131 கோடி மதிப்பீட்டில் 147 புதிய அன்னதானக் கூடங்களும், ரூ.261.47 கோடி மதிப்பீட்டில் 38 புதிய பக்தர்கள் தங்கும் விடுதிகளும் கட்டப்பட்டு வருகின்றன.

திருக்கோயில்களில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.188.14 கோடி மதிப்பீட்டில் 586 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. ரூ.35 கோடி மதிப்பீட்டில் 121 பசுக்கள் காப்பகங்களை மேம்படுத்தவும், 8 புதிய பசுக்கள் காப்பகம் கட்டவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 93 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு பெருந்திட்ட வரைவின்கீழ் (Master Plan) ரூ.1,770 கோடி மதிப்பீட்டில் 19 திருக்கோயில்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்தாண்டு ரூ.39 கோடி மதிப்பீட்டில் 4 திருக்கோயில்களில் பெருந்திட்ட வரைவுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ரூ.20.30 கோடியில் சோளிங்கரிலும், ரூ.9.10 கோடியில் அய்யர்மலையில் கம்பிவட ஊர்திகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

சுவாமிமலை மற்றும் மருதமலை திருக்கோயில்களில் மின்தூக்கி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் அக்டோபர் மாதத்திற்குள் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். ரூ. 67 கோடி அரசு நிதியில் சிறுவாபுரி திருக்கோயிலுக்கு சாலை விரிவாக்கம் மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் ரூ.57.50 கோடி அரசு நிதியில் திருத்தணி திருக்கோயிலுக்கு மாற்று மலைப்பாதை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. உலகிலேயே உயரமான முருகன் சிலைகள் மருதமலையிலும், ஈரோடு மாவட்டம், திண்டலிலும், இராணிப்பேட்டை மாவட்டம், குமரகிரியிலும் அமைத்திட ஆரம்பக்கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**714 அலுவலர்கள் - பணியாளர்கள் பணி நியமனம்!**

தந்தை பெரியார் கண்ட கனவினை நிறைவேற்றும் வகையில் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தின்கீழ் 29 அர்ச்சகர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். திருக்கோயில்களில் 12 பெண் ஓதுவார்கள் உட்பட 46 ஓதுவார்கள், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 714 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கருணை அடிப்படையில் துறையில் 34 நபர்களுக்கும், திருக்கோயில்களில் 128 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்றபின், நீண்ட ஆண்டுகளாக நிலுவையில் இருந்த 935 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 1,347 பணியாளர்கள் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதோடு, ஓய்வு பெற்ற அர்ச்சகர் மற்றும் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் பொங்கல் கருணைக்கொடை முதன்முதலாக வழங்கிய ஆட்சி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியாகும். திருக்கோயில் பணியாளர்களுக்கு குடும்பநல நிதி ரூ.4 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. திருக்கோயில் அர்ச்சகர் மற்றும் பணியாளர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை கட்டணமில்லா முழு உடற்பரிசோதனை செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆன்மிகப் பயணத்தை பொறுத்தளவில் இந்த அரசு தனிமுத்திரை பதித்துள்ளது. ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களுக்கும், அறுபடை வீடுகளுக்கும், இராமேசுவரம்காசிக்கும் மூத்தக் குடிமக்கள் கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர். மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆன்மிகப்பயணத்திற்கு அரசு மானியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆன்மிகப் பயணங்களின் மூலம் 7,797 பக்தர்கள் பயன்பெற்றுள்ளனர். தங்க முதலீட்டு திட்டத்தின் மூலம் 21 திருக்கோயில்களில் பயன்பாடற்று இருந்த பலமாற்று பொன் இனங்கள் ஓய்வுபெற்ற நீதியரசர்கள் முன்னிலையில் பிரித்தெடுக்கப்பட்டு ஒன்றிய அரசின் உருக்காலையில் உருக்கி பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டு திட்டத்தில் 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லி கிராம் சுத்த தங்கம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆண்டொன்றிற்கு வட்டித்தொகையாக ரூ.17.81 கோடி கிடைக்கப்பெறுகிறது.

இறைபசியோடு திருக்கோயில்களுக்கு வருபவர்களின் வயிற்று பசியையும் போக்குகின்ற அரசாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது. 13 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 764 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு மேலும் 2 திருக்கோயில்களில் நாள்முழுவதும் அன்னதானத் திட்டமும், 6 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானத் திட்டமும் விரிவுப்படுத்தப்பட உள்ளது. அன்னதானத் திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 3.5 கோடி பக்தர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.120 கோடி செலவிடப்படுகிறது. மேலும், பழனி திருக்கோயில் சார்பில் தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரத்துக்கு பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு 20 நாட்களில் 4 இலட்சம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதோடு, திருவிழா மற்றும் விசேஷ நாட்களில் கூடுதல் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

**நாள் முழுவதும் பிரசாதம்!**

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலிலும், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலும் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்ட நிலையில் இந்த அரசு பொறுப்பேற்றபின், 25 திருக்கோயில்களில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது. மலைக்கோயில்கள் மற்றும் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வருகைதரும் 19 திருக்கோயில்களில் மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவ பணியாளர்களுடன் மருத்துவ மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்து சமய அறநிலையத்துறைக்கு எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில் முதலமைச்சர் அவர்கள் ரூ.1,187 கோடியினை அரசு மானியமாக வழங்கியுள்ளார்கள். அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறையில் பணிகள் சிறப்பாக அமைந்திடவும், அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்திடவும், ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்ற முதலமைச்சர் அவர்களுக்கும், துறையின் செயலாளர், ஆணையர் உள்ளிட்ட அலுவலர்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலை பொறுத்தளவில் வீரவசந்தராயர் மண்டபம் 2018 ஆண்டு தீ விபத்தில் சேதமடைந்தது. அதனைத் தொடர்ந்து இத்திருக்கோயிலில் 64 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் தை மாதத்திற்குள் பணிகளை முடிக்க திட்டமிட்டுள்ளோம். வீரவசந்தராயர் மண்டபத்திற்கு கருங்கல் கிடைப்பது சிரமமாக சற்று காலதாமதம் ஏற்பட்டது. துறையின் அலுவலர்கள் முழு முயற்சியோடு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். திருவொற்றியூர் திருவள்ளூர் திருக்கோயில் திருப்பணி நடைபெற்று வருகிறது. காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் திருக்கோயில் மற்றும் திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயிலில் அமைந்துள்ள 1000 கால் மண்டபத்தினை சீரமைத்து பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த அரசு திராவிட மாடல் அரசாகும். காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் திருக்கோயில் திருப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, பொ. ஜெயராமன், திருமதி கோ. செ.மங்கையர்க்கரசி, சிறப்பு பணி அலுவலர் சி.லட்சுமணன் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### ஒன்றிய அரசு முன்மொழிந்துள்ள ஜி.எஸ்.டி. வரி எளிமைப்படுத்தல்!

# வரிக்குறைப்பின் பயன்கள் - நேரடியாக சாமானிய மக்களைச் சென்றடைய வேண்டும்!

## சமூக வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.31-

ஒன்றிய அரசு முன்மொழிந்துள்ள ஜி.எஸ்.டி. வரி எளிமைப்படுத்தல் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், "வரிக்குறைப்பின் பயன்கள் நேரடியாகச் சாமானிய மக்களைச் சென்றடைய வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப்பதிவு வருமாறு:-

**மாநிலங்களின் வருவாயைப் பாதுகாக்காமல், ஜி.எஸ்.டி. சீர்திருத்தங்கள் மக்களுக்குப் பயனளிக்காது.**

**ஒன்றிய அரசு முன்மொழிந்துள்ள ஜி.எஸ்.டி. வரி எளிமைப்படுத்தல் குறித்து கலந்தாலோசிப்பதற்காக டெல்லியில் எதிர்க்கட்சிகள் ஆளும் எட்டு மாநிலங்களின் மாண்புமிகு நிதியமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது.**

**இந்தச் சீர்திருத்தங்களின் நோக்கத்தை வரவேற்கும் அதே வேளையில், மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்புக்கு அவசியமான மாநில வருவாயைப் பாதிக்காத வகையில் இவை அமைய வேண்டும், வரிக்குறைப்பின் பயன்கள் நேரடியாகச் சாமானிய மக்களைச் சென்றடைய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளோம்.**

**இது குறித்து தயார் செய்யப்பட்டுள்ள ஒருமித்த வரைவறிக்கை ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு, மாநில வருவாயினைப் பாதுகாத்து, நியாயமான முடிவுகளை உறுதிசெய்ய அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றிய அரசின் ஆதரவு கோரப்படும்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மத்திய, மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட

# மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம்!

## துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. அறிவிப்பு!



சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மத்திய, மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் நாளை (01.09.2025 - திங்கட்கிழமை), காலை 10.30 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், ஓட்டல் அகார்டில் நடைபெறும்.

அதுபோது மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**ஆ. இராசா, எம்.பி.,**
துணைப் பொதுச்செயலாளர்,
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## க.வே. செழியன்
## ஆகஸ்ட் 31 (2022)



**தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**1975ஆம் ஆண்டு தனது பகுதியில் உதயசூரியன் நற்பணி மன்றம் தொடங்கி, பின்னர் பெரியார் எழுச்சி மன்ற காப்பாளராகவும், பின்னர் வட்டக் கழகத்தில் பகுதி பிரதிநிதியாகவும் திருவல்லிக்கேணி பகுதி துணைச் செயலாளராகவும், பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து, அதனைத் தொடர்ந்து பகுதிக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றிவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**"திருவல்லிக்கேணியில் கழகம் வளர்த்த உண்மைத் தொடர்" என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிபிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**